**MCOP No.52/2021**

**தேதி- 28.01.2025**

**பெயர் : திரு. ராஜேஷ்குமார், த/பெ. மாணிக்கவாசகம்**

**ம.சா.3 10.01.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**2து எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் செல் சென்டர் கடை வைத்திருப்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்றால் சரிதான். அன்பு என்பவர் என்னிடம் வேலை செய்தார் என்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்றால் சரிதான், ஆனால் அவருக்கு சம்பளம் வங்கி பரிவர்த்தனை மூலமாக அனுப்பபட்டது என்பதற்கு ஆதாரம் உள்ளது. நான் சம்பள பணம் அனுப்பியதற்கான வங்கி பரிவர்த்தனை ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால், அன்புவின் அப்பாவிடம் கொடுத்துள்ளேன், அது சம்மந்தமான ஆதாரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன்.

அன்பு என் கடையில் வேலை செய்யவுமில்லை என்றாலும், அவருக்கு நான் சம்பளம் கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, அன்பு என் கடையில் தான் வேலை செய்தார், அவருக்கு நான் சம்பளம் கொடுத்தேன். மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.